Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.6/2025

Dated 12-02-2026
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரலேகா | வயது | : | 15 |
| தந்தை பெயர் | : | சக்திவேல் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | 8 ம் வகுப்பு படித்து வருகிறேன். |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All **Accused present**

Ld. D. **Counsel Present**

தஞ்சாவூர் மேற்கு காவல்நிலைய தலைமை காவலர் செந்தில்குமார் 2880 என்பவர் சாட்சியை அடையாளம் காண்பித்தார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

கேள்வி: எந்த பள்ளியில் என்ன வகுப்பு படிக்கிறீர்கள்?.

பதில்: உமாமகேஸ்வராமேல் நிலை பள்ளியில் 8 ம் வகுப்பு படித்து வருகிறேன்.

கேள்வி: உங்களக்கு பிடித்தமான பாடம் என்ன?.

பதில்: இங்கிலிஸ்.

கேள்வி :உங்களுக்கு பிடித்த ஆசிரியை பெயர் என்ன ?.

பதில் : வள்ளியம்மை மிஸ்.

கேள்வி : இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளீரா?.

பதில்: இல்லை. இதுதான் முதன் முறையாக சாட்சியம் அளிக்கிறேன்.

( **சாட்சியானவர் நீதிமன்றம் கேட்கும் கேள்விகளை புரிந்துகொண்டு நியாயமான சராசரி மனிதன் அளிக்கும் பதில்களையே கூறினார். அவர் சாட்சியம் அளிக்க தகுதியுடையவர் என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது**.)

**முதல் விசாரணை**

1) இந்த வழக்கில் இறந்துபோன அற்புதம் என் தாத்தா ஆவார்.

2) 20.5.2024 ம் தேதி இரவு 9.30 மணியளவில் நானும் என் அம்மாச்சி எனது தாத்தா ஆகிய மூவரும் எனது தாத்தா வீட்டில் சாப்பிட்டுவிட்டு படுத்து இருந்தோம். அப்போது யாரோ கதவை தட்டுவதுபோன்று சத்தம் கேட்டது.

3) அப்போது அம்மாச்சி, தாத்தா இருவரும் போய் கதவை திறப்பதாகவும் என்னை உள்ளே இரு என்று சொன்னார்கள். அம்மாச்சி போய் கதவை திறந்தார். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் 2 வது எதிரி சத்யசீலன் என்பவர் எனது அம்மாச்சியை தலையில் வெட்டினார். எனது தாத்தா மறித்தபோது சத்யசீலன் தாத்தாவின் தலையில் வெட்டினார். அம்மாச்சி

கத்தினாங்க. நான் வீட்டை விட்டு வெளியே வரும்போது சத்யசீலன், குணா, அருண், சக்திவேல் நான்கு பேரும் செத்துட்டான் என்று சொல்லிக்கொண்டுபோய்விட்டார்கள்.

4) நான் கர்சீப்பை எடுத்து என் தாத்தா தலையில் கட்டிவிட்டேன். நானும் என் தாத்தாவை ஆஸ்பத்திரிக்கு போகலாம் என்று நாங்கள் முன்னால் போனோம். என் அம்மாச்சி நடக்கமுடியாததால் பின்னால் வந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் நால்வரும் பைக்கில் வந்தார்கள். வந்து என் தாத்தாவை அந்த 4 பேரும் வெட்ட வந்தார்கள். அப்போது என் தாத்தா என் கையை பிடித்துஇருந்தார். கையை விடவே இல்லை. கையை விடவில்லை என்றால் கையை வெட்டிவிடுவதாக அருண் சொன்னார். அப்போதும் தாத்தா கையை விடவில்லை. அப்போது அருண் சத்யசீலனிடம் அவன் கையை வெட்டு என்று சொன்னார்.

5) அப்போது நான் என் தாத்தா கையை விட்டுவிட்டேன். சத்யசீலன், குணா இருவரும் என் தாத்தாவின் காலின் பின் பக்கம் வெட்டினார்கள். சக்திவேலுவும், குணாலும் எனது தாத்தாவின் தலையில் வெட்டி கண்ணை செதுக்கினார்கள். அப்போது என் அம்மாச்சி கத்தினார். வெட்டி விட்டு சென்ற சத்யசீலனும் குணாலும் திரும்பி வந்து என்னை திட்டினார்கள். என்னை மிரட்டியதால் நான் சந்து வழியாக பள்ளிக்கு ஓடிவிட்டேன். இரவு முழுவதும் பள்ளிக்கூடத்தில் உள்ள பிள்ளையார்கோவிலில் தாத்தாவின் பட்டன் செல்போனை வைத்துக்கொண்டு இருந்துவிட்டேன்.

6) நான் அங்கேயே இரவு தூங்கி விட்டேன்.மறுநாள் காலை 5 மணியளவில் யாரோ ஒரு

சார் போன் செய்தார். நான் எடுத்து பேசினேன். எங்கே இருக்க என்று கேட்டார்கள். நான் பள்ளியில் இருப்பதாக சொன்னேன். அதற்கு பிறகு ஜீப் எடுத்து வந்து என்னிடம் நைட் முழுவதும் எங்கே தங்கினாய் என்றுகேட்டார்கள். நான்இங்கேதான் இருந்தேன் என்று சொன்னேன். என் சட்டையின் பின்புறம் இறந்துபோன என தாத்தாவின் ரத்தம் படிந்து இருந்தது.

7) போலிசார் என்னை விசாரித்தபோது என்ன ரத்தம் என்று கேட்டார்கள். தாத்தாவை வெட்டும்போது பட்ட ரத்தம் என்று சொன்னேன். பிறகு அரண்மனை காவல்நிலையத்திற்கு என்னை அழைத்து சென்றார்கள். அதற்கு பிறகு பெண்காவலர் தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். அப்போது தாத்தா இறந்தது எனக்கு தெரியாது. மருத்துவமணைக்கு உள்ளே சென்றபோதுதான் காவலரும் என் அம்மாச்சியும் தாத்தா இறந்த விஷயத்தை சொன்னார்கள். தாத்தாவை போஸ்ட்மார்ட்டம் செய்வதற்காக அம்மாச்சியை டிஸ்சார்ஜ் செய்து அழைத்து போய்விட்டோம். போலிசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள். மேலும் இதே நீதிமன்ற வளாகத்தில் வேறு ஒரு நீதிபதி என்னை விசாரித்தார். நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம்தான் இதே நீதிமன்ற வளாகத்தில் வேறு ஒரு நீதிபதி அவர்களிடம் கொடுத்த வாக்குமூலம் ஆகும். இதில் உள்ள விபரங்கள் நான் சொன்னதுதான். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் அணிந்திருந்த ஆடையில் ரத்தம் பட்டிருந்ததால் அதை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் நான் ஒப்படைக்கவில்லை.

2) போலிசார் என்னை விசாரிக்கும்போது சத்யசீலன், குணா, என் அப்பா சக்திவேல் இருந்தார்கள் என்று சொல்லி உள்ளேன்.

3) நீதிபதியிடம் வாக்குமூலம் கொடுக்கும்போது சத்யசீலன், குண, சக்திவேல் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாக பெயர் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன். அதுபோல் போலிசார் விசாரித்தபோதும் சத்யசீலன், குண, சக்திவேல் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாக பெயர் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன்.

4) கோடை விடுமுறை என்றால் வழக்கமாக என் மாமா வீடான வல்லத்திற்கு சென்றுவிடுவோம் என்றால் சரிதான்.

5) சம்பவ சமயத்தில் கோடை விடுமுறை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எதிரிகள் குணா, சத்யசீலன் பெயரை தெரியும்.

6) போலிசார் மற்றும் நீதிபதி அவர்கள் என்னை விசாரித்தபோது குணா பெயரையோ சத்யசீலன் பெயரையோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளேன்.

7) கதவை திறக்கும்போது 2 வது எதிரி சத்ய சீலன் என் அம்மாச்சி தலையில் வெட்டினார் தாத்தாவை மறித்து சத்யசீலன் தலையில் வெட்டினார் என்று பெயரை குறிப்பிட்டு போலிசார் மற்றும் நீதிபதி அவர்கள் என்னை விசாரித்தபோது சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

8) குணா, சத்யசீலன், அருண், சக்திவேல் ஆகிய நான்குபேரும் வெட்டிவிட்டு செல்லும்போது செத்துண்டான்டா என்று சொல்லிக்கொண்டே போனர்கள் என்ற விபரத்தை போலிசார் மற்றும் நீதிபதி அவர்கள் என்னை விசாரித்தபோது சொல்லி உள்ளேன்.

9) எனது தாத்தா என் கையை பிடித்துகொண்டிருந்தபோது என் கையை விடும்படி என் தாத்தாவை சத்யசீலனும், குணாவும் மிரட்டினார்கள் என்ற விபரத்தை போலிசார் மற்றும் நீதிபதி அவர்கள் என்னை விசாரித்தபோது சொல்லி உள்ளேன்.

10) போலிசார் என்னை விசாரிதத்போது குணாவும், சத்யசீலனும் என்னை மிரட்டினார்கள் என்றும் அப்போது நான் சந்து வழியாக சென்றேன் என்று சொன்ன விபரத்தை போலிசார் மற்றும் நீதிபதி அவர்கள் என்னை விசாரித்தபோது சொல்லி உள்ளேன்.

11) கோடை விடுமுறை என்றால் எங்கள் பள்ளி மூடிவிடுவார்கள் என்றால் சரியல்ல. எங்கள் பள்ளி திறந்து இருக்கும். அங்கு காலையில் சிலம்பம் நடக்கும்.

12) வீட்டில் தாக்கப்பட்ட பிறகு அ.சா.1 க்கு கால் முடியாது என்பதால் மெதுவாக நடந்து வந்தார் என்றால் சரிதான். நானும் என் தாத்தாவும் புகார் கொடுப்பதற்காக முதலில் போலிஸ் ஸ்டேசனுக்கு போனோம் என்றால் சரிதான்.

13) காலையில் 5 மணிக்கு ஒரு போலிஸ்தான் தாத்தா செல்போனுக்கு போன் செய்தார் என்றால் சரிதான்.

14) சம்பவசமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் கோடைவிடுமுறை என்பதால் நான் என் மாமா வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல.

15) என் சட்டையில் தாத்தாவை வெட்டும்போது அந்த ரத்தம் என் சட்டையில் பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

16) போலிசார் விசாரிக்கும்போது சக்திவேல் அந்த இடத்தில் இருந்தார் என்று சொல்லி உள்ளேன்.

17) பெயர் குறிப்பிட்டு சத்யசீலன், குணா ஆகியோர் என் தாத்தாவின் பின்தலையில் வெட்டினார்கள் என்று போலிசார் விசாரணையிலும் நீதிபதியிடம் கொடுத்த வாக்கமூலத்திலும் சொல்லி இருக்கிறேன்.

18) சத்யசீலன், குணா ஆகியோர் என் தாத்தாவின் கண்ணை செதுக்கினார்கள் என்று போலிசார் விசாரணையிலும் நீதிபதியிடம் கொடுத்த வாக்கமூலத்திலும் சொல்லி இருக்கிறேன்.

19) சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசாரும், என் பெரியப்பா பாபுவும் சொல்லி கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20) தற்போது போலிசார் சொல்லி கொடுத்துதான் இன்று முதல் விசாரணையில் சத்யசீலன், குணா பெயர்களை சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல.

21) சம்பவத்திற்கு பிறகு பள்ளிக்கூடத்தில் போய் மறைந்து இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

**/உண்மை நகல்/**

ஒம்/-P.வேல்முருகன்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்